بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 26/06/2026 அன்று U.K - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

**மாநபி (ஸல்) அவர்களின் உண்மைத் தொண்டர், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஏழைகளின் நலன் பேணுதல் மற்றும் வள்ளண்மை ஆகிய பண்புகள்: ஈமானை உறுதிப்படுத்தும் குறிப்பு**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۱﴾ اَلۡحَمۡدُ لِلّٰہِ رَبِّ الۡعٰلَمِیۡنَ ﴿۲﴾ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۳﴾ مٰلِکِ یَوۡمِ الدِّیۡنِ ﴿۴﴾ اِیَّاکَ نَعۡبُدُ وَ اِیَّاکَ نَسۡتَعِیۡنُ ﴿۵﴾

اِہۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِیۡمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِیۡنَ اَنۡعَمۡتَ عَلَیۡہِمۡ ۬ۙ غَیۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَیۡہِمۡ وَ لَا الضَّآلِّیۡنَ ﴿۷﴾

அல்லாஹ்வின் கட்டளைபடியும், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் முன்மாதிரியின்படியும் செயல்பட்டவாறு, ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வாழ்வில் ஏழைகளின் நலன் பேணுதல் மற்றும் வள்ளல் தன்மை ஆகியவற்றின் பல நிகழ்வுகள் நமக்குக் கிடைக்கின்றன. இந்த நற்பண்புகள் (இறைவன் புறமிருந்து வந்தவர் என்ற) அன்னாரது வாதத்தைச் சார்ந்தவையல்ல. மாறாக, ஹுஸூர் (அலை) அவர்களின் வாழ்வின் தொடக்கப் பருவத்திலும், இளமைப் பருவத்திலும்கூட நமக்கு அன்னாருடைய உயர் நல்லொழுக்கங்களின் நிகழ்வுகள் கிடைக்கின்றன. அல்லாஹ் ஹுஸூர் (அலை) அவர்களை எந்தத் தாயின் மடியில் வளரச் செய்தானோ அவர்களுடைய வாழ்வையும் நாம் பார்க்கும்போது, அங்கும் நமக்கு ஏழைகளின் நலன் பேணுதல் மற்றும் வள்ளல் தன்மையின் நிகழ்வுகள் கிடைக்கின்றன. ஆக, அன்னாருக்கு உயர் நல்லொழுக்கங்களையும் கற்றுக் கொடுத்த ஓர் அன்னையின் மடியில் அன்னார் வளர்ந்தார்கள்.

ஹஸ்ரத் ஷேக் யஃஃகூப் அலீ சாஹிப் இர்ஃஃபானீ (ரலி) அவர்கள் எழுதுகிறார்கள்: ஹஸ்ரத் மாயீ சிராக் பீபீ சாஹிபா, அதாவது, ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்ஊத் (அலை) அவர்களின் தாயார் அவர்களுடைய குடும்பம் ஹோஷியார்பூர் மாவட்டத்தில் உள்ள ஆயிமா எனும் இடத்தில் உண்மையான மரபு வழியைச் சேர்ந்த, ஒரு கண்ணியமான முகாலையக் குடும்பமாகும். அவர்களின் இயல்பில் வள்ளல் பண்பும், விருந்தோம்பலும் நிறைந்து கிடந்தது. கற்புடைமையும், ஒழுக்கமும் கொண்ட ஒரு பெண்மணியிடம் இருக்க வேண்டிய உயர்ப் பண்புகள் அவர்களிடம் இருந்தன. விருந்தோம்பலுக்கு அவர்களுடைய உள்ளத்தில் பெரும் எழுச்சியும், இதயத்தில் தாராள மனப்பாண்மையும் இருந்தது. நான்கு பேருக்கு உணவு அனுப்புங்கள் என்ற தகவல் அவர்களுக்குக் கிடைத்தால், உணவு செல்லும்போது, அது எட்டுக்கும் மேற்பட்ட மக்களுக்காக இருக்கும். தமது நகரத்தின் ஏழை இயலாதோர் மீது குறிப்பாக அக்கறை காட்டுவார்கள். ஏழை

குடும்பத்தில் இறந்தவர்களுக்கு இவர்களிடமிருந்து கஃபன் துணி கிடைக்கும். இது இவர்களுடைய வழக்கத்தில் இருந்த ஒரு சிறப்பான விஷயமாகும்.

ஹஸ்ரத் மியான் அல்லாஹ் யார் சாஹிப் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: ஹுஸூர் (அலை) அவர்கள் சியால்கோட்டில் ஊழியராக இருந்த காலத்தில், ஒருமுறை ஹுஸூர் அவர்களுக்காக ஹுஸூர் அவர்களின் தாயார் இரண்டு ஜோடி உடைகளையும், சிறிது {பின்னியா(ன்) எனும் ஒருவகை} லட்டுகளையும், மங்கல் ஹஜாம் என்பவரிடம் கொடுத்தனுப்பினார்கள். (அவர் சொல்கிறார்:) நான் இந்தப் பொருட்களை எடுத்துக் கொண்டு சியால்கோட்டுக்குச் சென்றேன். ஹுஸூர் (அலை) அவர்களுக்கு முன்னால் வைத்து விட்டேன். அப்பொழுது, ஹுஸூர் (அலை) அவர்கள், "உனது பங்கில் வருவதை நீ எடுத்து கொண்டு, எனது பங்கை எனக்குக் கொடுத்து விடு" என்று கூறினார்கள். அதற்கு நான், 'ஹுஸூர், இவை தங்களுக்குரியவை. தாயார் அவர்கள் தங்களுக்காக அனுப்பியுள்ளார்கள்' என்றேன். அதற்கு அன்னார், "நீ எல்லாப் பொருட்களையும் இவ்வளவு தொலைவு சுமந்து வந்திருக்கிறாய். எனவே, உனக்கான பாதி பங்கைக் கண்டிப்பாக எடுத்துக் கொள்" என்று கூறினார்கள். இவ்வாறாக, ஒரு ஜோடி உடையையும், சிறிது லட்டுகளையும் எனக்கு வழங்கி விட்டார்கள். பிறகு அன்னார், "நீ அம்மா ஜான் அவர்களிடம் (அதாவது, தாயார் அவர்களிடம்) சென்று என்னை இங்கிருந்து உடனடியாகத் திருப்பி அழைத்துக் கொள்ளுமாறு சொல். இங்கு இருக்க என் உள்ளம் விரும்பவில்லை" என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் சாஹிப் (ரலி) அவர்கள் ஓர் அறிவிப்பை எடுத்துக் கூறுகிறார்கள்: ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊத் (அலை) அவர்கள் சியால்கோட்டில் தங்கியிருந்தார்கள். அன்னார், வீட்டில் யாரையும் சந்தித்துப் பேச மாட்டார்கள். மேலும், அன்னார் தமக்குக் கிடைக்கும் சம்பளத்தை தேவை உடையவர்களுக்குப் பகிர்ந்தளித்து விடுவார்கள். உடைகள் தயாரிக்கச் செய்து வழங்குவார்கள். அல்லது ரொக்கப் பணம் வழங்கிடுவார்கள். தமக்காக உணவுக்கான செலவை மட்டும் வைத்துக் கொள்வார்கள்.

தொடக்க காலத்தில் அன்னார் (இறைசிந்தனையுடன்) தனிமையில் வாழ்ந்து வந்தார்கள். இதுவே ஹுஸூர் (அலை) அவர்களின் இயல்பாக இருந்தது. எனவே, இதுபோன்ற நற்பண்புகள் மறைமுகமாகவே நடைமுறைக்கு வந்தன. ஆனால், அல்லாஹ் அன்னாரைப் பொது வாழ்வுக்குக் கொண்டு வந்ததும், மக்கள் வந்து போதல் மிகுதியாக ஆகத் துவங்கியதும், அன்னாரது நிலைமைகள் பொதுவாகத் தெரியத் துவங்கியதும், அந்த நிகழ்வுகளைப் பார்ப்பவர்களும், எடுத்துரைக்கப்பவர்களும் கூடப் பிறந்து விட்டார்கள். அன்னார் உதவி கேட்டு வருபவர்களுக்கு ஒருபோதும் மறுக்க மாட்டார்கள்.

ஹஸ்ரத் மவ்லானா அப்துல் கரீம் சாஹிப் ஸியால்கோட்டீ (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: ஒரு நாள் இவ்வாறு நிகழ்ந்தது, அஸ்ர் தொழுகைக்குப் பிறகு, ஹுஸூர் (அலை) அவர்கள் எழுந்து, உள்ளே செல்வதற்காகப் பள்ளிவாசலின் ஜன்னலில் காலை வைத்தார்கள். இதற்குள் ஓர் இரவலர் மெல்லிய குரலில் நான்

தானம் கேட்பவன் வந்துள்ளேன் என்று கூறினார். ஹஸ்ரத் சாஹிப் (அலை) அவர்களுக்கு அப்பொழுது ஒரு முக்கியமான வேலையும் இருந்தது. அவரது குரலும் கொஞ்சம் மற்றவர்களின் குரலோடு கலந்து போனது. எனவே, ஹுஸூர் (அலை) அவர்கள் உள்ளே சென்று விட்டார்கள்.

அப்பொழுது அதே மெல்லிய குரல் அன்னாரது உள்ளத்தில் தெளிவான தாக்கத்தை ஏற்படுத்தியது. ஹுஸூர் (அலை) அவர்கள் கலீஃபா நூருத்தீன் சாஹிப் அவர்களிடம், "ஓர் இரவலர் இருந்தார் அவர் எங்கே என்று பாருங்கள்" என்றார்கள். ஆனால், அவர் எங்கே தேடியும் கிடைக்கவில்லை. மாலையில் தொழுகைக்குப் பிறகு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மீண்டும் அமர்ந்திருக்கும்போது, அதே இரவலர் மீண்டும் வந்து விட்டார்; தானம் கேட்டார். ஹஸ்ரத் சாஹிப் (அலை) அவர்கள் மிக விரைவாக ஆடைப் பையிலிருந்து ஏதோ எடுத்து, அவர் கையில் வைத்து விட்டார்கள். இப்பொழுது ஏதோ ஒரு சுமை தலையிலிருந்து இறங்கி விட்டது போன்று அன்னார் மகிழ்ச்சியடைந்ததாகத் தெரிந்தது.

காதியானிலிருந்து ஏறத்தாழ 6 மைல் தொலைவில் சட்(ஹ்)யாலீ என்ற ஒரு குக்கிராமம் உள்ளது. அங்கிருந்து ஜாட் இனத்தைச் சேர்ந்த இரவலர் ஒருவர் வருவார். அவர் மஸ்ஜித் முபாரக்கின் கூரையின் கீழ் வந்து ஜன்னலுக்குப் பக்கத்தில் நின்று கொண்டு, 'குலாம் அஹ்மத்! {(அலை)} ஒரு ரூபாய் வாங்க வந்துள்ளேன்' என்று குரல் கொடுப்பார். அங்கே உட்கார்ந்து கொள்வார். ஹஸ்ரத் சாஹிப் (அலை) அவர்கள் ஏதாவது பணியில் மூழ்கியிருந்தால், கொஞ்ச கொஞ்ச நேரத்திற்குப் பிறகு, குரல் கொடுப்பார். இது பல மக்களுக்கு ஏற்புடையதாக இருக்காது. யாராவது அவரை ஏதாவது சொல்லியதாக ஹஸ்ரத் அக்தஸ் (அலை) அவர்களுக்குத் தெரியவந்தால், அன்னார் அதை விரும்ப மாட்டார்கள். மேலும், சிரித்துக் கொண்டே அவருக்கு ரூபாய் கொடுத்து விடுவார்கள்.

ஹுஸூர் (அலை) அவர்கள் 1905 இல் கடைசியாக தில்லிக்குச் சென்றார்கள். ஒருநாள் அன்னார் தில்லியுள்ள மஸார்களுக்கெல்லாம் சென்றுவரலாம் என்று புறப்பட்டார்கள். ஒருவர், 'ஹுஸூர்! அந்தப் பக்கம், வழியில் எவ்வளவு அதிகமாக யாசகர்கள் இருப்பார்கள் என்றால், கடந்து செல்வது சிரமமாகி விடும்' என்றார். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள், "இன்று நாம் செல்வோம்; அனைவருக்கும் கொடுப்போம்" என்று கூறினார்கள். அன்றைய நாள் கேள்விப்பட்ட அளவுக்கு இரவலர்கள் கிடைக்கவில்லைதான்; எனினும், சிலர் கிடைத்தார்கள். ஒவ்வொருவரும் தான் (தானம்) கேட்டதற்கான விடையை செயல் ரீதியில் பெற்றார்.

நாக்பூரைச் சேர்ந்த ஹஸ்ரத் ஹாஃபிஸ் அஹ்மதுல்லாஹ் சாஹிப் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: ஒருநாள் ஹுஸூர் (அலை) அவர்கள் வட்ட அறையில் அமர்ந்திருந்தார்கள். அங்கு ஏறத்தாழ 20, 25 பேர் இருந்தார்கள். ஹுஸூர் (அலை) அவர்கள் ஏதோ உரை நிகழ்த்திக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது ஓர் இரவலர் வந்து, உரத்த குரலில் (உதவி) கேட்டார். அவர்கள் கூறுகிறார்கள்:

ஹுஸூர் (அலை) அவர்களின் குரலில் குறுக்கீடு ஏற்படுகிறது என்று எனக்கு மிகுந்த மனவருத்தம் ஏற்பட்டது. நான் கதவை அடைத்து விட்டேன். ஹுஸூர் (அலை) அவர்கள் உரை நிகழ்த்துவதை நிறுத்தி விட்டு என்னிடம், “உள்ளே கதவைத் தட்டி, இந்த இரவலருக்கு உள்ளே இருந்து ஏதாவது வாங்கிக் கொடுங்கள்” என்று கூறினார்கள். மேலும், “இரவலர் உதவி கேட்கும் போது கதவை அடைத்து விடுவது சரியல்ல” என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் ஷேக் யஃகூப் அலீ இர்ஃபானீ சாஹிப் (ரலி) அவர்கள் எழுதுகிறார்கள்: 1892 -லிருந்து காதியானுக்கு வந்து கொண்டிருந்தேன். 1898 முதல், நிலையாக ஹஸ்ரத் சாஹிப் (அலை) அவர்களின் மேலான சமூகத்தில் வந்து விட்டேன். எனது கண் முன் பல மக்கள் உதவி கேட்டிருக்கிறார்கள். நான் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இரவலருக்கு செம்பு நாணயத்தை, அதாவது, பைசாவை வழங்கி பார்த்ததில்லை. அன்னார் எப்பொழுதும் வெள்ளி நாணயம் வழங்குவார்கள். அதாவது, அதிக பணம் வழங்குவார்கள்.

ஒருமுறை ஓர் இரவலர் ஹஸ்ரத் (அலை) சாஹிப் அவர்களிடம் தனிமையில் வந்து, ‘நான் காட்டில் ஒரு கிணறு வெட்ட விரும்புகிறேன். அங்கு வழிப்போக்கர்களுக்கு இளைப்பாற வசதியாக இருக்கும்; அவர்கள் நீர் அருந்துவார்கள்’ என்று கூறிப் பொருளுதவி கேட்டார். ஹஸ்ரத் சாஹிப் (அலை) அவர்கள், “மக்களுக்குத் தொண்டு செய்ய நீங்கள் இந்தப் பணியைச் செய்கிறீர்கள்; நான் உங்களுக்குப் பணம் தருகிறேன்” என்று கூறி அவருக்கு இதற்காக 200 ரூபாய் வழங்கி விட்டார்கள். இவ்வாறு அன்னார் படைப்பினத் தொண்டு (கித்மத்தே கல்க்) செய்யுமாறு நமக்குக் கட்டளையிட்டது மட்டுமின்றி, அதற்கும் மேலாகத் தாமே செயல் முன்மாதிரியாகவும் திகழ்ந்து காட்டியிருக்கிறார்கள்.

ஹஸ்ரத் அப்துஸ் ஸமீ சாஹிப் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: மியான் ஷரீஃப் அஹ்மத் சாஹிப் (ரலி) அவர்களுக்கு அகீக்கா நடைபெற்றது. விருந்தினர் இல்லத்தில் விருந்தினர்கள் அனைவரும் உணவு உண்டு கொண்டிருந்தார்கள். ஓர் இரவலர் உதவி கேட்க விருந்தினர் இல்லத்துக்கு உள்ளே வந்து விட்டார். மக்கள் அவரை வெளியேற்றப் பார்த்தபோது, ஹுஸூர் (அலை) அவர்கள் இரவலருக்குத் தாமே உணவு வழங்கினார்கள். “உணவு உண்ண வந்துள்ளார்; அவரை விரட்டக்கூடாது” என்று இரவலரை விரட்டுவதிலிருந்து மக்களைத் தடுத்தார்கள்.

ஹஸ்ரத் முன்ஷீ ஸஃபர் அஹ்மத் சாஹிப் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: ஒருமுறை ஒரு மவ்லவி காதியான் வந்தார். அவர் ஹுஸூர் (அலை) அவர்களுடன் விவாதம் செய்யத் துவங்கினார். ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் மரணம் மற்றும் வாழ்வு எனும் தலைப்பில் உரையாடல் நிகழ்ந்தது. பிறகு, ஹுஸூர் (அலை) அவர்கள் அவருக்கு பதில் அளிக்கத் துவங்கியதும் அவர் மௌனமாகி விட்டார். அன்னார் அவருக்குப் புரிய வைத்து விட்டு அவரிடம், “புரிந்து கொண்டீர்களா?” என்று வினவினார்கள். அதற்கு அவர் சிறிதும் பண்பற்ற சொற்களைப் பயன்படுத்தி, ‘நீங்கள் தஜ்ஜால் என்று புரிந்து

கொண்டேன்; ஏனென்றால், விவாதத்தில் எதிராளியை வாயடைக்கச் செய்வது தஜ்ஜாலின் ஒரு பண்பாகும்' என்றார் - நவூதுபில்லாஹ்.

இதற்குப் பிறகு, ஹுஸூர் (அலை) அவர்கள் எதுவும் கூறவில்லை. அவர் சென்று விட்டார். அவர் அமிர்தசரஸ் சென்று ஒரு பிரசுரத்தை வெளியிட்டார். அதில் இந்த நிகழ்வை எடுத்துக் கூறிவிட்டு, 'அன்னார் உள்ளே சென்றதும், நான் தேவையுடையவன் ஆவேன் எனக்கு சற்று உதவி வழங்கிடுங்கள் என்று ஒரு சீட்டு எழுதி அனுப்பினேன். அன்னார் உடனடியாக 15 ரூபாய் அனுப்பி விட்டார்கள். அன்னார் மிகவும் வள்ளல் ஆவார்கள்' என்று கூறினார்.

ஹஸ்ரத் காஸீ அப்துல் ஃகஃபூர் சாஹிப் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: 1906 இல் நான் என் மூத்த சகோதரருடன் ராவல்பிண்டியிலிருந்து காதியானுக்குச் சென்றேன். ஹுஸூர் (அலை) அவர்கள் பள்ளிவாசலின் படிகளில் இறங்கி வந்து கொண்டிருந்தார்கள். ஹகீம் ஷாஹ் நவாஸ் எனும் ஒருவர் ஹுஸூர் (அலை) அவர்களுக்கு ஒரு பையில் 17 பவுண்டை அன்பளிப்பாகக் கொடுத்தார்கள். ஹுஸூர் (அலை) அவர்கள் அந்தப் பணப்பையை வாங்கித் தம் ஆடைப் பையில் வைத்துக் கொண்டார்கள். கீழே ஓர் இரவலர் நின்று கொண்டிருந்தார். அவர் உதவி கேட்டு விட்டார். ஹுஸூர் (அலை) அவர்கள் ஆடைப் பையிலிருந்து அந்தப் பணப்பையை எடுத்து அவருடைய கையில் வைத்து விட்டார்கள். ஹகீம் சாஹிப் அவர்கள், 'ஹுஸூர், இதில் 17 பவுண்டுகள் இருந்தன' என்று பணிவுடன் கூறினார்கள். அதற்கு அன்னார், "இவை அவருக்கானவையாக இருந்தன. அவரிடமே போய் சேர்ந்து விட்டன" என்று கூறினார்கள். இது அந்தக் காலத்தில் மிகப் பெரிய தொகையாகும்.

ஹஸ்ரத் உம்முல் முஃமினீன் (ரலி) அவர்கள் கூறியதாக ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் சாஹிப் (ரலி) அவர்கள் அறிவித்துள்ளார்கள். அவர்கள் எழுதுகிறார்கள்:- தாயார் அவர்கள் என்னிடம், 'ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மிக அதிகமாக சதக்கா வழங்கி வந்தார்கள். பொதுவாக எப்படி இரகசியமாக வழங்குவார்கள் என்றால், எங்களுக்கும் தெரியாமலிருக்கும்' என்று கூறினார்கள். நான், 'அன்னார் எவ்வளவு சதக்கா வழங்கி வந்தார்கள்?' என்று வினவினேன். அதற்குத் தாயார் அவர்கள், 'மிக அதிகமாக வழங்கி வந்தார்கள். இறுதி காலத்தில் எவ்வளவு ரூபாய் வந்ததோ அதில் பத்தில் ஒரு பங்கை சதக்காவுக்காகத் தனியாக எடுத்து வைத்து விடுவார்கள்' என்று கூறினார்கள்.

பத்தில் ஒரு பங்கை விட அதிகம் வழங்க மாட்டார்கள் என்பது இதற்குப் பொருள் கிடையாது. மாறாக, சிலவேளை (கணிக்கும்) தேவைக்கு அதிகமாக செலவுகள் ஆகி விடும். அப்பொழுது சதக்கா வழங்குவதில் குறைபாடு ஏற்பட்டு விடக்கூடாது என்பதற்காக, முன்னரே குறைந்தபட்சம் பத்தில் ஒரு பங்கை, அந்த ரூபாய்கள் வேறு செலவில் வந்து விடமல் இருப்பதற்காகத் தனியாக எடுத்து வைத்து விடுவார்கள். அன்னார் சதக்கா வழங்குவதில் அஹ்மதி, அஹ்மதி அல்லாதவர் என்று வேற்றுமை காட்ட மாட்டார்கள். உதவி கேட்பவருக்கு

ஒருபோதும் மறுக்காமல் இருப்பது ஹுஸூர் (அலை) அவர்களின் வழக்கமாகும். உதவி கேட்பவரின் நுணுக்கத்திலும் நுணுக்கமான நிலையையும் நன்றாகப் புரிந்து வைத்திருந்ததும், அன்னாருடைய மேலான பழக்கத்தில் ஒன்றாகும்.

ஒருமுறை ஒருவர் ஹுஸூர் (அலை) அவர்களுக்கு ஓர் அழகான தொப்பியை அனுப்பினார். இந்த பார்சல் ஹஸ்ரத் சாஹிப் (அலை) அவர்களிடம் வந்து சேர்ந்த போது, அங்கு தற்செயலாக ஒரு ஹிந்துவும் இருந்தார். அன்னார் பார்சலைத் திறந்ததும் அதில் தொப்பி இருந்தது. அந்த ஹிந்து அந்தத் தொப்பியின் அழகை மிகவும் புகழ்ந்தார். அன்னார் அந்தத் தொப்பியை அவருக்கே வழங்கி விட்டார்கள்.

சர்ஃபராஸ் கான் எனும் ஓர் அஹ்மதி கூறுகிறார்: நாங்கள் ஜல்ஸாவுக்கு வந்தோம். ஹுஸூர் (அலை) அவர்களுக்கு ஒருவர் குதிரைப் பெடையை அன்பளிப்பாக வழங்கினார். 'குதிரை எனக்குக் கிடைத்து விட வேண்டும். நான் அதை எடுத்துச் செல்ல வேண்டும். இதோ! மஸீஹ் (அலை) அவர்களின் குதிரையைக் கொண்டு வந்துள்ளேன் என்று நான் சொல்ல வேண்டும்' என என் உள்ளத்தில் தோன்றியது. ஜல்ஸாவுக்குப் பிறகு, 'ஹுஸூர், நான் திரும்பிச் செல்ல விழைகிறேன்' என்று பணிவுடன் கூறினேன். அதற்கு ஹுஸூர் (அலை) அவர்கள், "(கொஞ்ச நாள்) இருங்கள்" என்றார்கள். சில நாள்களுக்குப் பிறகு, நான் மீண்டும் அவ்வாறே சொன்ன போது, ஹுஸூர் (அலை) அவர்கள், "சௌத்ரீ சாஹிப், இந்தக் குதிரையைக் கொண்டு செல்லுங்கள்" என்று கூறினார்கள். நான், 'ஹுஸூர், இந்தக் குதிரையின் விலை என்ன?' என்று பணிவுடன் கேட்டேன். அதற்கு ஹுஸூர் (அலை) அவர்கள், "இதற்குப் புல்லும், தானியமும் போடுங்கள். இதன் மீது ஏறி பயணித்திடுங்கள். இதுவே இதற்கான விலையாகும்" என்று கூறினார்கள்.

*இறுதியில் ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் கூறினார்கள்:* எல்லாம் வல்ல அல்லாஹ் எந்த உயர் நல்லொழுக்கங்களை உருவாக்குவதற்காக, மாநபி (ஸல்) அவர்களின் ஊழியராக ஹுஸூர் (அலை) அவர்களை அனுப்பினானோ, அந்த உயர் நல்லொழுக்கங்களைக் கடைபிடிக்கக் கூடியவர்களாக அல்லாஹ் நம்மையும் ஆக்குவானாக.

اَلْحَمْدُ لِلّٰهِ! اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّاٰتِ

اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ اللّٰهُ فَلَا مُضِلَّ لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِيَ لَهٗ وَنَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ،

عِبَادَ اللّٰهِ رَحِمَكُمُ اللّٰهُ اِنَّ اللّٰهَ يَاْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِى الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ

تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

**(தமிழாக்கம்: முரப்பி அத்தாவுல் முஃக்னீ)**